உயிரெழுத்து 3, 'அ' 'ம்' 'மா' என்கின்ற வகையிலே அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, லால்பேட்டை பேரூராட்சி என்பது இஸ்லாமியப் பெருமக்கள் அதிகம் இருக்கக்கூடிய பேரூராட்சியாகும். அங்கே இருக்கக்கூடிய இஸ்லாமியப் பெருமக்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துகின்ற வகையிலே பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி ஒன்று அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், லால்பேட்டையிலே இஸ்லாமிய மாணவர்கள் அதிகம் இருப்பதாகச் சொல்கின்றார். மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

195—

ஆரம்ப சுகாதார நிலையம்

***17559—திரு. கடம்பூர் ராஜூ:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, நாலாட்டின்புத்தூர், அய்யனார்ஊத்து ஆகிய ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன்.

கோவில்பட்டி தொகுதி, நாலாட்டின்புதூர் மற்றும் அய்யனார்ஊத்து ஆகிய ஊராட்சிகளில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

என்ற குறளின்படி, உலகின் குடிமக்கள் சிறப்புடன் அனைத்தும் பெறும்வகையில் ஆட்சி புரியும் மன்னன்தான் சிறந்த மன்னன் என்று வான்புகழ் வள்ளுவன் கூறியதையும் மிஞ்சும்வகையில், தாயின் கருவிலே உருவாகி, தமிழ் மண்ணில் பிறப்பதற்கு முன்பாகவே கருவின் சிசுவுக்கும் "அம்மா மகப்பேறு சஞ்சீவி" திட்டம் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினம் காத்து நிற்கும் காவல் தெய்வம் அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

கோவில்பட்டி தொகுதியிலே, கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் நாலாட்டின்புதூர், கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்திலே அய்யனார்ஊத்து ஆகிய ஊராட்சிகள், பேரூராட்சியில் இருக்கும் அளவுக்கு அதிக மக்கள்தொகை கொண்ட ஊராட்சிகளாகும். இங்கு புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டுமென்ற இந்த மக்களின் நீண்டநாள் கோரிக்கையை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, மறு ஆய்வுசெய்து அமைத்திட வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

2015 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட, சமவெளிப் பகுதி என்றால் 30 ஆயிரம் மக்கள்தொகையும், மலைப் பகுதியாக இருந்தால் 20 ஆயிரம் மக்கள்தொகையும், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து இன்னொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 8 கிலோ மீட்டர் இடைவெளியும் இருக்க வேண்டுமென்ற நியதி உள்ளது. இது மத்திய அரசின் இலக்கு. அதன்படி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற நாலாட்டின்புதூர் ஊராட்சியானது, கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இந்த ஒன்றியத்தில் ஏற்கெனவே 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அருகிலே 8 கிலோ மீட்டர் தொலைவிலே கோவில்பட்டி அரசு மருத்துவமனையும் உள்ளது. அதோடு, தூத்துக்குடி மாவட்டத்திலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற அய்யனார்ஊத்து ஊராட்சியானது, கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. அந்த ஊராட்சியிலும் ஏற்கெனவே நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்குள்ள மக்கள்தொகைக்குப் போதுமானதாக, நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, மேற்குறிப்பிட்ட இரண்டு ஊராட்சிகளிலும் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்காக மறு ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு ஆய்வுசெய்து, பரிசீலனை செய்யப்படும் என்று கூறியதற்காக தங்கள் வாயிலாக நன்றிகூறி அமைகின்றேன்.